தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 123/பேரூ/2021

நாள் 29.12.2021

திரு. P. ராஜா நல்லதம்பிஜான்சன்,
ஆண்டிபட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

1. செயல் அலுவலர்,
   ஆண்டிபட்டி பேரூராட்சி
2. திரு. அ. முருகானந்தம்,
   சுகாதார ஆய்வாளர்,
   சோழவந்தான் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்கள்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி, தேனி மெயின் ரோடு, பெருமாள் காம்ப்ளக்ஸ், நிரேஷ் மோட்டார்ஸ் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. ராஜா நல்லதம்பி ஜான்சன் என்பவரது **15.11.2021** நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் **22.11.2021**ல் பெறப்பட்டு, **123**/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி, தேனி மெயின் ரோடு, பெருமாள் காம்ப்ளக்ஸ், நிரேஷ் மோட்டார்ஸ் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. ராஜா நல்லதம்பி ஜான்சன் என்பவர் தனது **15.11.2021** நாளிட்ட புகார் மனுவில், மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சியில் சுகாதாரஆய்வாளராக பணிபுரியும் திரு. ஆ. முருகானந்தம், தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணியேற்பு செய்த நாள் முதல் ஐந்தாறு வருடங்களாக எவ்வளவு பணம் கையாடல் செய்ய முடியுமோ அவ்வளவு பணத்தை கையாடல் செய்துள்ளார் என்றும் அதற்கு கீழ்க்கண்டவை ஆதாரங்களாக உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்:-

1. சுய உதவிக்குழு நலச்சங்கம் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கும்போது, இரண்டு தினசரி வருகைப் பதிவேட்டினை தயார் செய்வார். அதில் ஒன்று அவர்கள் முறையாக பணிக்கு வந்த நாட்களுக்கான உண்மையான வருகைப் பதிவேடு ஆகும். மற்றொன்று போலியாக தயாரிக்கப்படும் தினசரி வருகைப் பதிவேடு ஆகும்.

2. சுயஉதவிக் குழு மூலம் பணிபுரியும் மொத்த தூய்மைப் பணியாளர்களில் அவரவர் சூழ்நிலைக்கேற்ப மாதத்தில் 30 நாட்களுக்கும் குறைவாக பலபேர் பணிக்கு வந்திருப்பார்கள். உதாரணமாக ஒருவர் 15 நாட்கள், ஒருவர் 18 நாட்கள், ஒருவர் 25 நாட்கள் என பணிக்கு வந்திருப்பார்கள். இது உண்மையான வருகைப் பதிவேடு ஆகும்.

3. மற்றொன்று அனைத்து பணியாளர்களும் 25 நாட்களுக்கும் மேல் 30 நாட்களுக்குள் பணிக்கு வந்ததாக ஒரு போலியான வருகைப் பதிவேட்டினை சுகாதார ஆய்வாளர் தயார் செய்து, போலியான ஊதியப் பட்டியலை அலுவலகத்தில் சமர்ப்பித்து, காசோலையினை சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள் நலச் சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் மூலம் பெறச் செய்து, அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்குமாறு ஏற்பாடு செய்துவிடுவார்.

4. அதன் பின், உண்மையாக வருகைபுரிந்த நாட்களுக்கான பட்டியலை ரகசியமாக யாருக்கும் தெரியாமல் தூய்மைப் பணியாளர்கள் நலச்சங்கத் தலைவரிடம் சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் கொடுத்துவிடுவார். அதன்படி மின்னனு பணப்பரிவர்த்தனை மூலம் பணியாளர்களுக்கு ஊதியத்தை அவர்கள் வங்கிக் கணக்கில் ஏற்றிவிட்டு, கூடுதலாக உள்ள வித்தியாசத் தொகையினை தூய்மைப் பணியாளர் நலச்சங்கத் தலைவர் தங்களது வங்கிக் கணக்கிலிருந்து ரொக்கமாக எடுத்து சுகாதார ஆய்வாளர் வசம் கொடுத்துவிடுவார்.

5. உண்மையான பட்டியலுக்கும், போலியாக தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலுக்கும் உள்ள வித்தியாசத் தொகை மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூபாய் ஒரு லட்சம் முதல் ரூபாய் இரண்டு லட்சத்திற்கும் மேல் இருக்கும். இப்படி சுகாதார ஆய்வாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் ஒவ்வொரு மாதமும் நூதன முறையில் பணத்தை கையாடல் செய்து வந்துள்ளார்.

6. உதாரணத்திற்கு சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்களின் 11/2020ம் மாதத்தில் சுகாதார ஆய்வாளரால் போலியாக தயார் செய்யப்பட்டு, சுய உதவிக் குழு தலைவர் மூலம் காசோலையாக பெற்ற ஊதியத் தொகை ரூ.8,56,258/– ஆகும்.

7. சுகாதார ஆய்வாளரால் ரகசியமாக தயாரிக்கப்பட்ட உண்மையான பட்டியல்படி சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்களின் 11/2020ம் மாதம் வழங்கப்பட்ட ஊதியத் தொகை ரூ.6,94,244/– ஆகுமென்றும், இதற்குரிய பட்டியல் நகலினையும் மனுதாரர் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

8. இரண்டு பட்டியலுக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.1,92,014/–ஐ சுயஉதவிக்குழு தூய்மைப் பணியாளர் நலச்சங்கத் தலைவர் தங்களது வங்கிக் கணக்கிலிருந்து பணமாக எடுத்து சுகாதார ஆய்வாளர் வசம் ரகசியமாக கொடுத்துவிடுவார்.

9. சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர்களின் வங்கிக் கணக்கு எண்ணைப் பெற்று சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் பணிபுரிந்த காலத்திற்கான அறிக்கையினை வங்கியிலிருந்து பெற்றால், எவ்வளவு தொகை ஊதியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது? எவ்வளவு தொகை ரொக்கமாக எடுக்கப்பட்டு சுகாதார ஆய்வாளரால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

10. அப்படி தெளிவாக பார்க்கும்பட்சத்தில், சுகாதார ஆய்வாளர் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் மட்டும் பணிபுரிந்த காலத்தில் மட்டும் குறைந்தது ரூபாய் 50 லட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரை பேரூராட்சி நிர்வாகத்திற்குத் தெரியாமல் கையாடல் செய்திருப்பது எளிதாக தெரிந்துவிடும்.

11. ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் சுமாராக 100 தூய்மைப் பணியாளர்களுக்கு மேலாக மாதத்திற்கு பல லட்ச ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டு, குப்பைக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட உரத்தினை சுகாதார ஆய்வாளர் நிர்வாகத்திற்கு தெரியாமலும், ரசீது போடாமலும், உரத்தினை விற்று பணம் கையாடல் செய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் உற்பத்தி செய்யப்படும் உரத்தின் அளவு மற்றும் இருப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தால் உண்மை நிலை தெரிந்துவிடும்.

12. தற்காலிக தினக்கூலி தூய்மைப் பணியாளர்களை சுகாதார ஆய்வாளரே நியமிப்பதால், அவர் கட்டளையிடும் அவரது வீட்டு வேலைகள், குப்பைக் கிடங்கில் மாடுகளை பராமரிக்கும் வேலைகள் மற்றும் தனது காரைக் கழுவும் வேலைகள் உள்பட அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும். அவரது சொந்த வேலைகள் அனைத்திற்கும் அரசு பணத்தை ஊதியமாக பெறுபவர்களைப் பயன்படுத்துவார். மறுத்தால், வேலையிலிருந்து நீக்கம் செய்துவிடுவார்.

மேற்குறிப்பிட்டுள்ள புகார்கள் குறித்து விசாரணை செய்து சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், அவர் கையாடல் செய்த ஏழை எளிய பொது மக்கள் வரியாக கட்டிய பணத்தினை மீட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர உரிய ஆணைகளைப் பிறப்பிக்குமாறு கோரி, இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 23.12.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு, இம்முறைமன்ற நடுவ 16.12.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. மேற்கண்ட இருவரும் 23.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. P. ராஜா நல்லதம்பி ஜான்சன் 23.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “ஆண்டிபட்டி பேரூராட்சியில் பணிபுரியும் திரு. ஆ. முருகானந்தம் (தற்போது சோழவந்தான் பேரூராட்சி சுகாதார ஆய்வாளர்) என்பவர் சுய உதவிக் குழு நலச் சங்கத்தின் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் வருகைப் பதிவேட்டினை தானே தயாரித்து, அப்பதிவேட்டின்படி ஊதியம் கொடுத்ததாக போலி கணக்கு காட்டியும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உரம் தயாரித்தல் பணியிலும் பல முறைகேடுகள் செய்து, பணக் கையாடல் செய்து வருகிறார். எனவே, இதற்குக் காரணமான

மேற்கண்ட திரு. முருகானந்தம் உட்பட பேரூராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான எனது 23.12.2021 நாளிட்ட விளக்கத்தினையே எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்நேர்வு தொடர்பான தணிக்கைப் பத்தி அறிக்கை, ஊதியப் பட்டியல் ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் தனது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 23.12.2021 நாளிட்ட விளக்கத்தில் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியின் முன்னாள் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்த திரு. ஆ. முருகானந்தம் தனது பணிக்காலத்தில் சுயஉதவிக்குழு நலச் சங்கம் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் வருகைப் பதிவேட்டினை தானே தயாரிப்பதால் நிர்வாகத்திற்கும், நிர்வாக அலுவலர்களுக்கும் தெரியாமல் போலியாக ஊதியப்பட்டியல் தயாரித்தது மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் உரம் தயாரிக்கும் பணியில் முறைகேடு செய்து, கோடிக்கணக்கான ரூபாய் கையாடல் செய்திருப்பதால், அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆதாரங்களுடன் மனு அளித்திருந்தேன். அதே சமயம், மேற்படி முறையீடு தொடர்பாக ஆய்வு செய்யக் கோரி தேனி மாவட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை அலுவலகத்திற்கு 22.9.2021ல் மனு அனுப்பியிருந்தேன். என்னால் கொடுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு, ஏப்ரல் 2019 முதல் ஜுலை 2021 முடிய உள்ள காலத்தில் மட்டும் ரூ.57,81,506/– (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்று ஆறு மட்டும்) கையாடல் செய்திருப்பதாக உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை அலுவலக கடித ந.க.எண்.399/நி.1/2021 நாள் 25.11.2021–ன்படி தனக்கு தணிக்கைப் பத்தி அறிக்கை கிடைக்கப்பெற்று, அதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியிருந்தேன். மேலும், மேற்படி கையாடல் தொடர்பாக 11.12.2021 நாளிட்ட தினமலர், தினகரன், தினமணி மற்றும் தீக்கதிர் ஆகிய நாளிதழ்களில் தேனி மாவட்ட செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், Tamil Nadu News-18 தொலைக்காட்சி சேனலில் 16.12.2021 அன்று இரவு 10.00 மணிக்கு நடைபெற்ற Crime Time செய்தியில் விரிவாக செய்தி ஒளிபரப்பப்பட்டு You Tube–லும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது (You Tubeல் Crime Time/ரூபாய் 57 லட்சம் என டைப் செய்தால் மேற்கண்ட ஊழல் செய்தியினை பார்த்துக்கொள்ளலாம்). சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் தனது பணியினை ஊழல் செய்வதற்கு சாதகமாக பயன்படுத்தி ஊதியப் பட்டியல் தயாரித்து சான்றளித்து, ஒப்பமிட்டு, கோடிக் கணக்கில் பணம் கையாடல் செய்திருப்பது தெளிவாக தெரிகிறது. மேலும், ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும், ஒரு நிரபராதிகூட மாட்டிக்கொள்ளக் கூடாது என்ற நோக்கில் இதில் மற்ற அலுவலர்கள் எவருக்கும் தொடர்பிருக்க வாய்ப்பில்லை என்பதனையும் இவ்விசாரணையில் பதிவுசெய்ய விரும்புகிறேன். எனவே, இணைக்கப்பட்டுள்ள மேற்படி ஆதாரங்களை அடிப்படையாக வைத்து, ஆண்டிபட்டி பேரூராட்சியில் வசிக்கும் என்னைப்போன்ற ஏழை எளிய மக்கள் கஷ்டப்பட்டு வரியாக கட்டிய பணத்தை தனிநபர் திரு. ஆ. முருகானந்தம் தன் சுகபோக வாழ்க்கைக்காக கையாடல் செய்துள்ள கோடிக்கணக்கான பணத்தை மீட்டு மீண்டும் அரசுக் கணக்கில் சேர்ப்பதோடு, சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் போலியாக ஊதியப்பட்டியல் தயாரித்து அரசுப் பணத்தை கையாடல் செய்துள்ளதால், இந்திய தண்டனைச் சட்டப்படி குற்றவியல் (Criminal) நடவடிக்கை மேற்கொள்வதோடு, துறைரீதியான நடவடிக்கையும் மேற்கொண்டு, நீதியை நிலைநாட்டிட வேண்டுகிறேன்.

மேலும், தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, பொது நோக்கத்தோடு எனது உடல்நிலை சரியில்லாத நிலையிலும் எனது சொந்த பணத்தை பொது நோக்கத்திற்காக செலவு செய்து, பணத்தை கையாடல் செய்த நபருக்கும், மற்றவர்களுக்கும் இது ஒரு உதாரணமாக இருக்கவேண்டுமென்ற உணர்வோடு ஆண்டிபட்டியிலிருந்து தனது சொந்த வேலைகளை விட்டுவிட்டு சென்னைக்கு அலைந்துகொண்டிருப்பதாகவும், எனவே, தனது உடல்நிலையினைக் கருதி தம்மை தொடர்ந்து அலையவிடாமலும், இம்முறைமன்ற நடுவமும் சமுதாயத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற பொது நோக்கோடு, தம்மால் கொடுக்கப்பட்ட ஆதாரங்களை பரிசீலனை செய்து, குற்றம் செய்த நபருக்கு தண்டனை கிடைக்கும் விதமாகவும், பொது மக்களுக்கு ஆதரவாக நல்ல தீர்ப்பினை வழங்குமாறும் மனுதாரர் தனது 23.12.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரியும் திரு. கா. சின்னசாமி பாண்டியன் மற்றும் துப்புரவு ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் ஆகியோர் 23.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தங்களது வாக்குமூலத்தில் "ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கம் என்ற சுய உதவிக் குழுவின் மூலம் கழிவறைகளை பராமரித்தல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, தலைமை நீரேற்று நிலையப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப் பணியாளர்களை நியமித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒப்பந்தப் பணியாளர்களின் தினசரி வருகை குறித்த வருகைப் பதிவேடு ஆண்டிபட்டி பேரூராட்சியில் பராமரிக்கப்படவில்லை. மேலும், இந்நேர்வில் கண்டுள்ள தணிக்கைத் தடை குறித்து பதில் ஆண்டிபட்டி பேரூராட்சியின் மூலம் அனுப்பிவைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மனுதாரரால் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஆண்டிபட்டி செயல் அலுவலரின் 22.12.2021 நாளிட்ட கடிதத்தையே எங்களது வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

6. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 22.12.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரது புகார் மனுவிற்கான விளக்கம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்:-

<u>புகார் பத்தி எண்.1க்கான விளக்கம்</u>: ஆண்டிபட்டி பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பெருகிவரும் மக்கள் தொகை, புதிய சாலைகள், குடியிருப்புகளினால் உருவாகும் குப்பைகளை தீர்வு செய்ய பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4847/2013/உ4 நாள் 26.3.2014 மற்றும் ந.க.எண்.10130/2017/உ4 நாள் 21.8.2017ன்படியும், ஒப்பந்த அடிப்படையில் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.4 மற்றும் நாள் 10.01.2020ன்படி பெறப்பட்டு, சுய உதவிக்குழுக்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி சம்மந்தப்பட்ட சுயஉதவிக்குழுவால் மட்டுமே வருகைப் பதிவேடு பராமரிக்கப்பட்டு, ஒப்பந்ததொகை கோரி பட்டியல் அனுப்பப்படுகிறது. எனவே இரண்டு வருகைப் பதிவேடுகள் பராமரிக்கப்படுவதில்லை.

<u>புகார் பத்தி எண்.2, 3 மற்றும் 4–க்கான விளக்கம்</u>: ஒப்பந்த அடிப்படையில் நாள் ஒன்றுக்கு வழங்கவேண்டிய பணியாளர்களை சம்மந்தப்பட்ட சுய உதவிக் குழு வழங்குவதன்பேரில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. எந்தெந்த பணியாளர்கள் எத்தனை நாள் பணிக்கு வந்துள்ளார்கள் என்கிற விபரம் சுய உதவிக்குழுவால் மட்டுமே பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும், ஒப்பந்தத் தொகை கோரி சம்மந்தப்பட்ட சுய உதவிக் குழுவால் அளிக்கப்பட்ட பட்டியலுக்கு துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர் பரிந்துரையின் பேரில், கூராய்வு செய்யப்பட்ட பின்னர், சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.4847/2013/உ4 நாள் 26.3.2014ன்படி சுய உதவிக் குழுக்களிடம் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, அதனடிப்படையில் outsourcing முறையில் தேர்வு செய்து பயன்படுத்துதல் வேண்டுமெனவும், மேற்படி ஒப்பந்தப் புள்ளிக்கான தொகை எக்காரணம் கொண்டும் தனி நபர்களுக்கு வழங்கப்படக் கூடாது எனவும், சுய உதவிக் குழுக்களின் பெயரில் மட்டுமே ஒப்பந்த தொகை வழங்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளதன் அடிப்படையில், ஒப்பந்தத் தொகை கோடிட்ட காசோலையாக வழங்கப்பகிறது. மேலும், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்த தொகையினை சுய உதவிக்குழுவால் உறுப்பினர்களுக்கு ரொக்கமாக வழங்கப்பட்டதினை தவிர்க்கும்பொருட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் வங்கியில் ECS மூலம் சுய உதவிக்குழுவினரால் வழங்கப்படவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, வங்கிக் கணக்குகள் துவங்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ECS மூலமும், வங்கிக் கணக்கு துவங்கப்படாத உறுப்பினர்களுக்கு ரொக்கமாக பட்டுவாடா செய்யப்பட்டு, தற்போது முழுமையாக அனைத்து உறுப்பினர்களுக்கு ECS மூலம் சுய உதவிக்குழுவினரால் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்வது சுய உதவிக்குழுவின் பொறுப்பாகும்.

<u>புகார் பத்தி எண்.5க்கான விளக்கம்:</u> சுய உதவிக் குழுவால் ஒவ்வொரு மாதமும் ஒப்பந்த தொகை கோரி சரியான ஊதியப்பட்டியல் மட்டுமே அளிக்கப்படுகிறது. ஒப்பந்த தொகை கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்படுவதால் குழுவின் வங்கிக் கணக்கில் சரியாக வரவாக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>புகார் பத்தி எண்.6க்கான விளக்கம்</u>: 11/2020ம் மாதத்தின் அசல் ஊதியப்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுவால் கையொப்பமிடப்பட்டுள்ள கடிதத்துடன் கூடிய ஒப்பந்த தொகை பட்டியல் இவ்வலுவலகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுவால் 11/2020ம் மாதத்திற்கு ரூ.9,04,344/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தினான்கு மட்டும்) ஒப்பந்த தொகை கோரிய பட்டியல் அளிக்கப்பட்டதில், 2% வருமானவரி பிடித்தம் போக ரூ.8,86,258/–க்கு (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) காசோலை வழங்கப்பட்டுள்ளது. இதில் போலியான பட்டியல் ஏதும் இல்லை.

<u>புகார் பத்தி எண்.7–க்கான விளக்கம்</u>: பேரூராட்சி அலுவலகத்தில் எவ்வித இரகசிய பட்டியலும் தயாரிக்கப்படுவதில்லை. சுய உதவிக் குழுவால் வழங்கப்பட்ட மொத்த நாட்களுக்கான ஒப்பந்த தொகை கோடிட்ட காசோலையாக ரூ.8,86,258/–க்கு (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) வழங்கப்பட்டதில் சுய உதவிக்குழுவிடமிருந்து பெறப்பட்ட

வங்கிக் கணக்குகள், ஊதிய பட்டுவாடா ஆகியவற்றின் விவரங்கள் பார்வையிடப்பட்டது. அதன்படி வங்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு ரூ.6,94,244/– (ஆறு இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து இருநூற்று நாற்பத்தினான்கு மட்டும்), வங்கிக் கணக்கு அல்லாத பணியாளர்களுக்கு மீதித் தொகை ரூ.1,42,444/–ம் (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்ரெண்டாயிரத்து நானூற்று நாற்பத்தினான்கு மட்டும்) வழங்கப்பட்டுள்ளது. சங்கப் பொது காரியங்களுக்காக ரூ.49,570/– (ரூபாய் நாற்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்) பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுவிடமிருந்து பெறப்பட்ட வங்கிக் கணக்கு நகல் மற்றும் ஊதிய பட்டுவாடா ஒப்புதல் நகல்களை ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

<u>புகார் பத்தி எண்.8, 9 மற்றும் 10–க்கான விளக்கம்</u>: சுய உதவிக்குழுவிற்கு ஒப்பந்த நிபந்தனைகளின்படி வருமானவரி பிடித்தம் போக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த தொகை சுய உதவிக்குழுவின் வங்கிக்கணக்கில் சரியாக வரவாக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த தொகையில் சுய உதவிக்குழுவில் பணிபுரிந்த வெவ்வேறு பணியாளர்களுக்கான தொகை பட்டுவாடா முழுவதும் சுய உதவிக்குழுவினைச் சார்ந்ததாகும். வங்கிக் கணக்கில் 69 நபர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகை வழங்கப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கு அல்லாத 15 நபர்களுக்கு மீதித் தொகை வழங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை பணி என்பது மிகவும் அத்தியாவசிய பணி என்பதால், சுய உதவிக்குழுவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி பணியாளர் வரவில்லை என்றாலும், வந்துவிட்டு விடுப்பில் சென்றாலும், அப்பகுதியில் குப்பைகள் சேகரிக்க சுய உதவிக்குழுவினரே மாற்றுப் பணியாளரை வைத்து தினசரி நடைபெறும் பணிகளில் இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சுய உதவிக் குழுவால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, முன்னாள் சுகாதார ஆய்வாளர் மீதான புகார் உண்மைக்கு புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளதோடு, சுய உதவிக்குழுவுடன் பேரூராட்சி நிர்வாகம் மேற்கொண்டுள்ள ஒப்பந்த நகலினையும் செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் இணைத்து சமர்பித்துள்ளார்.

<u>புகார் பத்தி எண்.11–க்கான விளக்கம்</u>: ஆண்டிபட்டி பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டு, தயார் செய்யப்பட்ட மண்புழு உரம், இயற்கை உரம் போன்றவை முறையாக விற்பனை செய்யப்பட்ட தொகை பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்படுகிறது என்றும், உர விற்பனை வரவு விவரங்களை தமது அறிக்கையுடன் இணைத்துள்ளதாகவும் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

<u>புகார் பத்தி எண்.12–க்கான விளக்கம்:</u> ஆண்டிபட்டி பேரூராட்சியில் எவ்வித தற்காலிக தினக்கூலி பணியாளர்களும் பணிபுரியவில்லை. ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியாளர்கள் பணிபுரிகின்றனர். எந்த பணியாளரையும் சொந்த வேலைகளுக்கு பயன்படுத்த பேரூராட்சி அனுமதிப்பதில்லை.

7. இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் அளித்துள்ள புகார் மனுவினைத் தொடர்ந்து, தனது புகார் மனுவில் கண்டுள்ள புகார்களுக்கு ஆதாரமாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, தேனி அவர்களால் தமக்கு அளிக்கப்பட்ட 25.11.2021 நாளிட்ட கடிதத்தில்

ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் மேற்கண்ட புகார் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்வறிக்கை பேரூராட்சி நிர்வாகத்திற்கும், உள்ளாட்சி நிதித் தணிக்கை தலைமை அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்தான மேல் நடவடிக்கை பேரூராட்சி நிர்வாகத் தரப்பில் எடுக்கப்படும் என்ற விவரம் தமக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையின் நகலினையும் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

8. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை தடையறிக்கையில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 4/2019 முதல் 7/2021 முடிய திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம், ஆண்டிபட்டி சுய உதவிக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவது – ஒவ்வொரு மாத பட்டியல் மூலம் சுய உதவிக்குழுவிற்கு வழங்கும் தொகைக்கும், சுயஉதவிக்குழு மூலம் பணியாளர்களுக்கு ECS மூலம் விடுவிக்கும் தொகைக்கும் காணப்பட்ட வேறுபாடுகள் – NMR-இல் கடும்முறைகேடு – பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு – கையாடல் தொகை ரூ.57,81,506/– மீளப்பெறவேண்டும் என தலைப்பிடப்பட்டு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

- சுயஉதவிக்குழு வங்கிக் கணக்கிலிருந்து ECS மூலம் பணியாளர்களுக்கு விடுவித்த தொகையை சரிபார்க்க வங்கியிலிருந்து ஆவணங்கள் பெறப்பட்டு பட்டியல் தொகையுடன் ஒப்புநோக்கப்பட்டது. ஒவ்வொரு பணியாளருக்கும் பட்டியல் தொகை இன்றி வேறு தொகை விடுவிக்கப்பட்ட விவரம் கண்டறியப்பட்டது.

- பட்டியல் தயாரிப்பதற்கு ஒரு வருகைப் பதிவேடும், சுயஉதவிக்குழு மூலம் தொகை விடுவிக்க வேறொரு வருகைப் பதிவேடும் பேணிவருவதும் தெளிவாகிறது. உதாரணமாக 01/2021 மாதத்தில் 12/2020 மாதத்திற்கான பட்டியல் ரூ.9,32,176/–க்கு தயாரித்து BPV எண்.800/7.1.2021 மூலம் தொகை சுயஉதவிக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சுயஉதவிக்குழு மூலம் 12/2020 மாதத்திற்கு பணியாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தொகை ரூ.6,14,720/– மட்டுமே.

- இம்மாதிரியாக ஒவ்வொரு மாதமும் உண்மைக்குப் புறம்பாக பட்டியல் தயாரித்து அன்றைய சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் முறைகேட்டில் ஈடுபட்டுவந்தது கண்டறியப்பட்டது.

- பேரூராட்சி பட்டியல் மூலம் சுயஉதவிக்குழுவிற்கு விடுவித்த தொகைக்கும், சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு ECS மூலம் விடுவித்த தொகைக்கும் காணப்பட்ட வேறுபாட்டுத் தொகையை பேரூராட்சிக்கு சுயஉதவிக்குழு செலுத்தியதாக சுயஉதவிக்குழு தீர்மானம் நாள் 13.8.2019 மற்றும் 14.11.2019 மூலம் தெரியவருகிறது. ஆனால், பேரூராட்சி கணக்கிற்கு இத்தொகை வரவாக்கப்படவில்லை.

- எனவே, இத்தொகை சுகாதார ஆய்வாளர் மற்றும் செயல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

- இம்மாதிரியாக அனைத்து மாதங்களுக்கும் சுயஉதவிக்குழு பேரூராட்சி அலுவலர்களுக்கு வேறுபாட்டுத் தொகையை வழங்கியுள்ளது தெளிவாகிறது. இவ்வித்தியாசத் தொகை பேரூராட்சிக்கு இழப்பாகிறது.

- உண்மையில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.1,61,44,933/– மட்டுமே. ஆனால் BPV மூலம் பேரூராட்சியிலிருந்து சுயஉதவிக்குழுவிற்கு வழங்கிய தொகை ரூ.2,13,12,676/– ஆகும். இவ்வித்தியாசத் தொகை ரூ.51,67,743/– பேரூராட்சிக்கு இழப்பாகும். இவ்விழப்பை ஏற்படுத்திய துப்புரவு ஆய்வாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரிடமிருந்து தொகையை மீளப்பெற்று பேரூராட்சி நிதிக்கு செலுத்தப்படவேண்டும். மேற்படி இழப்பு கண்டறியப்பட்ட, மாத வாரியான கணக்கீட்டு முறையும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் மூலம் அட்டவணையிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

- N.M.Rல் இல்லாத பணியாளர்களுக்கும் ECS மூலம் தொகை வழங்கப்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது. 5/2019 முதல் 6/2021 முடிய ரூ.4,92,477/– வழங்கப்பட்டுள்ளது. இது கடும் முறைகேடு என தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. இதுகுறித்தான விரிவான அட்டவணையும் தணிக்கைத் தடை அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

- சுயஉதவிக்குழு NMRல் உள்ள சில பணியாளர்கள் உண்மையில் பணிபுரியவில்லை என்பது NMR மற்றும் சுயஉதவிக்குழு ECS பட்டியலையும் ஒப்புநோக்கும்போது கண்டறியப்பட்டது. எனவே, 78 பணியாளர்களை சுயஉதவிக்குழு பணியமர்த்தவில்லை என்பதும் போலியாக பட்டியல் தயாரித்துள்ளதும் தெளிவாகிறது. சுகாதார ஆய்வாளர், சுகாதார கண்காணிப்பாளர்கள் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் போலியாக பட்டியல் தயாரித்து பேரூராட்சிக்கு ரூ.4,92,477/– இழப்பு ஏற்படுத்தியுள்ளதும் தெளிவாகிறது.

- சுகாதார ஆய்வாளர்கள் மூலம் குப்பைக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது என்று துப்புரவு ஆய்வாளர் சான்று வழங்கியுள்ளார். ஆனால், இதற்கான எந்தத் தொகையும் பேரூராட்சிக்கு வரவாகவில்லை என்பது கண்டறியப்பட்டது. தயாரிக்கப்பட்ட உரத்தினை சுகாதார ஆய்வாளர் நிர்வாகத்திற்கு தெரியாமலும், இரசீது போடாமலும் உரத்தினை விற்று பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

- மக்காத குப்பைகளை மறுசுழற்சிக்காக பேரூராட்சி பகுதியில் உள்ள பழைய இரும்பு வியாபார கடைகளுக்கு விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயை அந்தந்த பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி உரிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக துப்புரவு ஆய்வாளர் சான்று வழங்கியுள்ளார். இது உண்மைக்கு புறம்பானதாகும். இது குறித்து எவ்வித பதிவேடுகளும் பேணப்படவில்லை என்பதும் தணிக்கையில் உறுதி செய்யப்பட்டது.

- ECS பட்டியல் மூலம் பணியாளர்கள் வங்கிக் கணக்கிற்கு வழங்கப்பட்ட தொகையை ஆய்வு செய்கையில் ஒருசில நபர்களுக்கு ஒரே மாதத்தில் இருமுறை தொகை வழங்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. பி. ராஜா, மஉறாதேவி, அய்யப்பன், பவானி என்ற பணியாளர்களுக்கு ஒரே மாதத்தில் (டிசம்பர் 2019) இருமுறை தொகை வழங்கியதும் கண்டறியப்பட்டது. இதன் மூலம் பேரூராட்சிக்கு ரூ.38,700/– இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்விழப்புத் தொகையை உரிய அலுவலர்களிடமிருந்து மீளப்பெற்று பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டும்.

- பேரூராட்சியில் **4/2019** முதல் **7/2021** முடிய உள்ள செலவுச் சீட்டுகள் வங்கியிலிருந்து பெறப்பட்ட ECS list மற்றும் செலவுச் சீட்டுகளுடன் இணைக்கப்பட்ட NMR பட்டியலுடன் ஒப்புநோக்கப்பட்டதில், ஒவ்வொரு மாதமும் இம்முறைகேடு தொடர்ந்து வந்துள்ளது என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, இக்குறைபாட்டால் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு **ரூ.57,81,506/–** ஆகும்.
- அரசுக்கு நிதியிழப்பு ஏற்படக் காரணமான மற்றும் இதற்கு பொறுப்பான பேரூராட்சி அலுவலர்கள் விவரம் வருமாறு:-

| வ. எண் | பேரூராட்சி அலுவலர் | பணிக்காலம் | | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| | | முதல் | முடிய | |
| 1. | ஆ. முருகானந்தம், துப்புரவு ஆய்வாளர் | 1.4.2019 | 31.7.2021 | சோழவந்தான் பேரூராட்சி, மதுரை மாவட்டம் |
| 2. | கா. பாலசுப்பிரமணியன் செயல் அலுவலர் | 1.4.2019 | 6.7.2020 | அய்யம்பாளையம் பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 3. | கோ. சுப்பிரமணியன், செயல் அலுவலர் | 7.7.2020 | 7.2.2021 | க.புதுப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம் |
| 4. | இளவரசன், செயல் அலுவலர் | 8.2.2021 | 18.8.2021 | விடுப்பில் உள்ளார் |

இம்முறைகேட்டில் ஈடுபட்டு பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுத்திய மேற்குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து இழப்புத் தொகையை மீளப்பெற்று பேரூராட்சி நிதியில் வரவாக்கப்படவேண்டும். மேலும், இம்முறைகேடுகள் கடந்த ஆண்டுகளிலும் இப்பேரூராட்சியில் நடைபெற்றுள்ளதா என்பதை நிர்வாக ரீதியில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**9.** மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்டுள்ள **23.12.2021** நாளிட்ட கூடுதல் அறிக்கை, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் தடை அறிக்கை நகல், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி முன்னாள் சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலம், திரு. முருகானந்தம் அளித்துள்ள **23.12.2021** நாளிட்ட விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது **22.12.2021** நாளிட்ட விளக்க அறிக்கை, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், ஒப்புதல் இரசீது நகல்கள், பாரத ஸ்டேட் வங்கி அளித்துள்ள கணக்குவிவர அட்டவணை (statement of Account) மற்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் நகல் ஆகிய அனைத்து ஆவணங்களும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ❖ மனுதாரர் திரு. ஆ. முருகானந்தம், தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்தபோது சுய உதவிக்குழு நலச் சங்கம் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதில் இரண்டு தினசரி வருகைப் பதிவேட்டினை தயார் செய்து, பண மோசடி செய்துள்ளதாகவும், எனவே, மேற்கண்ட மோசடி குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு, கையாடல் செய்த ஏழை எளிய பொது மக்கள் வரியாக கட்டிய பணத்தினை மீட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 15.11.2021 நாளிட்ட புகார் மனுவினை அளித்துள்ளார். இதன் பின்னர், தனது 8.12.2021 நாளிட்ட கடிதம் மூலம், தனது புகாருக்கு ஆதாரமாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, தேனி அவர்களால் மனுதாரருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ந.க.எண்.399/நி1/2021 நாள் 25.11.2021 மற்றும் அதன் இணைப்பாக உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தேனியால் ஆண்டிபட்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையின் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

- ❖ ஆண்டிபட்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு பல்வேறு இனங்களில் கண்டறியப்பட்டுள்ளவாறு மொத்த இழப்புத் தொகை ரூ.57,81,506/– (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்று ஆறு மட்டும்) ஆகுமென்றும், இவ்விழப்பிற்கு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து இத்தொகையை மீளப்பெற்று பேரூராட்சி நிதியில் செலுத்தப்படவேண்டுமென்றும், இம்முறைகேடுகள் கடந்த ஆண்டுகளிலும் இப்பேரூராட்சியில் நடைபெற்றுள்ளதா என்பதை நிர்வாக ரீதியில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம் என்ற சுய உதவிக் குழுவின் மூலம் கழிவறைகளை பராமரித்தல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, தலைமை நீரேற்று நிலையப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப் பணியாளர்களை நியமித்து பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும், ஒப்பந்தப் பணியாளர்களின் தினசரி வருகை குறித்த வருகைப் பதிவேடு ஆண்டிபட்டி பேரூராட்சியில் பராமரிக்கப்படவில்லை என்றும், இந்நேர்வில் கண்டுள்ள தணிக்கைத் தடை குறித்த பதில், ஆண்டிபட்டி பேரூராட்சியின் மூலம் அனுப்பிவைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாக்குமூலத்தில் திரு. ஆ. முருகானந்தம், ஆண்டிபட்டி பேரூராட்சி முன்னாள் சுகாதார ஆய்வாளரும் கையொப்பமிட்டுள்ளார்.

- ❖ ஆண்டிபட்டி பேரூராட்சி முன்னாள் சுகாதார ஆய்வாளர் திரு. ஆ. முருகானந்தம் அளித்துள்ள 23.12.2021 நாளிட்ட விளக்கத்தில் சுய உதவிக்குழுவால் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அக்குழுவால் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களில் சிலர் விடுமுறை எடுத்திருப்பின், அவர்களுக்கு பதிலாக மாற்றுப் பணியாளர்களை சம்மந்தப்பட்ட சுய உதவிக்குழுவால் பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்ததன் அடிப்படையில், சுய உதவிக்குழுவால் ஊதியம் கேட்பு செய்யப்படுவதாகவும், சுய உதவிக்குழு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தினசரி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்குத் தேவையான எண்ணிக்கைக்கு சுய உதவிக்குழு மூலம் பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர் என்றும், சுய உதவிக்குழு மூலம்

தினசரி ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு வருபவர்களின் எண்ணிக்கையினை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அனைத்து பகுதிகளிலும், கழிவுகளை சேகரிக்கவும், பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தொற்றுநோய் தடுப்புப் பணிகளை துப்புரவு மேற்பார்வையாளர்கள் மேற்பார்வை செய்கின்றனர் என்றும், எனவே வருகைப் பதிவினைப் பொருத்தவரையில், சுய உதவிக்குழுவினால் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேடு மட்டுமே உள்ளது என்றும், இப்புகாரில் உண்மைத் தன்மை இல்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

❖ மேலும், ஒவ்வொரு மாதத்திற்கும் பணிபுரிந்த திடக்கழிவு மேலாண்மை பணியாளர்கள் அனைவருக்கும் கூலித் தொகை வங்கி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வழங்கும் பணியை சம்மந்தப்பட்ட துப்புரவு பணியாளர் நலச்சங்கமே தனது சொந்த பொறுப்பில் மேற்கொள்கிறது என்றும், எனவே சுய உதவிக்குழு மூலம் வழங்கப்படும் ஊதியப் பட்டுவாடாவிற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

❖ மனுதாரரால் குறிப்பிட்டுள்ளவாறு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை தனது சொந்த வேலைகளுக்கு பயன்படுத்தியதே இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

❖ ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் குறித்த தணிக்கைத் தடைக்கான பதில் அறிக்கை ஆண்டிபட்டி பேரூராட்சியின் மூலம் அனுப்பிவைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

❖ 1.09.2018 முதல் 31.08.2019 வரையிலான காலத்திற்கும், 1.4.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கும் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கும், துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம், ஆண்டிபட்டிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்த உடன்படிக்கையின்படி (1) மக்கும் குப்பைகளை தரம் பிரித்து தனியாக ஒப்படைக்கவும், மக்காத கழிவுகள், உடன் விற்பனை செய்யக்கூடிய கழிவுகள் சேகரிப்பவர்களே எடுத்துக்கொண்டு விற்பனை செய்துகொள்ளவும், எஞ்சிய மக்காத கழிவுகளை தரம் பிரித்து வளம் மீட்புப் பூங்காவில் ஒப்படைக்கவும் (2) மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் அந்தந்த பகுதி துப்புரவு மேற்பார்வையாளரின் உத்தரவுகள், அறிவுரைப்படி தீர்வுசெய்ய பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் (3) ஒப்பந்தத் தொகை பிரதி மாதம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மேலொப்பம் பெற்ற பின்பு மட்டுமே வழங்கப்படும் என்றும் (4) துப்புரவு பணியாளர் நலச்சங்கத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியலில் வருமானவரிப் பிடித்தமாக 2 சதவீதம் பிடித்தம் செய்த பின்னரே ஒப்பந்த தொகை வழங்கப்படுமென்றும் (5) திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தும் பணியாளர்கள் அனைவருக்கும் முழுப்பொறுப்பு சுய உதவிக் குழுவைச் சார்ந்தது, பேரூராட்சி நிர்வாகம் எவ்வித பொறுப்பும் ஏற்காது (6) பணியாளர்கள் வருகை பதிவுகள், மாத இறுதியில் செயல் அலுவலரிடம் காண்பித்து ஒப்புதல் பெறவேண்டும் (7) பணி செய்தமைக்கு பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரிடம் பணி மேற்பார்வைச் சான்று பெறவேண்டும் (8) திடக்கழிவு மேலாண்மைப் பணியில் தயாரிக்கப்படும் உரங்கள் விற்பனை செய்து பேரூராட்சிக்கு அவ்வப்போது செலுத்தி ரசீது

பெற்றுக்கொள்ளப்படவேண்டும் (9) குழு பணியாளர்கள் எவரேனும் விடுப்பில் சென்றால் கழிவுகள் சேகரிக்கும் பணி பாதிக்காத வகையில் மாற்றுப் பணியாளர்களை அனுப்பவேண்டும் என்பன போன்ற பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு, உடன்பாடு எட்டப்பட்டு இரு தரப்பினராலும் கையொப்பமிடப்பட்டுள்ளது

❖ பேரூராட்சிகளின் ஆணையரக இணை இயக்குநர் (பொது) அவர்களது கடிதம் ந.க.எண்.13579/2021/ஊ4 நாள் 08.11.2021 தேனி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முகவரியிடப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், தேனி மண்டலம், தேனிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் ஆண்டிபட்டி பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணியேற்பு செய்த நாள் முதல் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கான சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு உண்மையான வருகை பதிவேடு மற்றும் போலியான வருகைப் பதிவேடு தயார் செய்து, சுய உதவிக்குழு பணியாளர்களின் ஊதியத்தில் கையாடல் செய்துள்ளதாக வரப்பெற்றுள்ள திரு. பி. ராஜாநல்லதம்பி ஜான்சன், ஆண்டிபட்டி என்பவரது புகார் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தொடர்புடைய ஆவணங்களுடன் விரிவான அறிக்கையினை மூன்று நாட்களுக்குள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலத்திற்கு சமர்ப்பித்திடுமாறு ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது கடிதம் ந.க.எண்.3471/2021/பேரூ.2 நாள் 18.11.2021ல் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

❖ மனுதாரர் 11/2020 மாதத்திற்கு சுய உதவிக்குழுத் தலைவர் மூலம் காசோலையாக பெற்ற ஊதியத் தொகை ரூ.8,56,258/– என்றும், சுகாதார ஆய்வாளரால் ரகசியமாக தயாரிக்கப்பட்ட உண்மையான பட்டியல்படி சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர்களின் 11/2020க்கான ஊதியத்தொகை ரூ.6,94,244/– என்றும், இரண்டு பட்டியலுக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.1,92,014/–ஐ சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர் நலச்சங்கத் தலைவர் தங்களது வங்கிக் கணக்கிலிருந்து பணமாக எடுத்து சுகாதார ஆய்வாளர் வசம் ரகசியமாக கொடுத்துவிடுவார் என்று புகார் அளித்துள்ளார். இதற்கு ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையில் 11/2020 மாதத்திற்கு சுய உதவிக் குழுவினால் கோரப்பட்ட ஒப்பந்த தொகை ரூ.9,04,344/– (ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) என்றும், அதில் ஒப்பந்த உடன்படிக்கையின்படி 2 சதவீத வருமான வரி பிடித்தம் ரூ.18,086/– (ரூபாய் பதினெட்டாயிரத்து எண்பத்தாறு மட்டும்) போக ரூ.8,86,258/– (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) காசோலையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் போலியான பட்டியல் ஏதும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதற்கான ஆதாரமாக ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் கையொப்பமிடப்பட்ட Expenses Journal voucher மற்றும் Bank payment voucher ஆகியவற்றை ஆதாரமாக அளித்துள்ளார். மேலும், மேற்கண்ட புகார் குறித்து கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களையும் செயல் அலுவலர் அளித்துள்ளார்:-

| | |
|---|---|
| வங்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு (69 பேர்) வழங்கப்பட்ட தொகை | ரூ. 6,94,244/– |
| வங்கிக் கணக்கு அல்லாத பணியாளர்களுக்கு (15 பேர்) சுய உதவிக்குழுவால் வழங்கப்பட்ட தொகை | ரூ. 1,42,444/– |
| கூடுதல் | ரூ. 8,36,688/– |
| சங்க பொதுக் காரியங்களுக்கு பிடித்தம் | ரூ. 49,570/– |
| மொத்த கூடுதல் (Grand Total) | ரூ. 8,86,258/– |

❖ 11/2020 மாதத்திற்கான வருகை பதிவு விவரம் ஆண்டிபட்டி பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்-I மற்றும் II ஆகியோரால் சரிபார்க்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டுள்ளது.

❖ 11/2020 மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளி தொகைபடி பணியாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.392/– (ரூபாய் முன்னூற்று தொன்னூற்றிரண்டு மட்டும்) வீதம் 78 பணியாளர்களுக்கு, விடுப்பு எடுத்த நாட்கள் கழித்து, பணிபுரிந்த நாட்களுக்கான ஊதியமாக 2307 மனித நாட்களுக்கு 2307 x 392 = ரூ.9,04,344/– (ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கம், ஆண்டிபட்டியால் 3.12.2020 அன்று ஒப்புதல் வழங்கக் கோரி, தலைவர் மற்றும் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு பேரூராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ஊர்ஜிதமாகிறது.

❖ 11/2020ல் 78 பணியாளர்களுக்கான ஊதியத்திற்கான வருகைப் பதிவேடு, ஒவ்வொருவருக்கான ஊதிய விவரங்கள் அடங்கிய NMR Details of Labour employed விவரங்களும், அதன் அடிப்படையில் 11/2020க்கு ஒப்பளிக்கப்படவேண்டிய ரூ.9,04,344/–க்கான (ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தினான்கு மட்டும்) விவரங்களுடன் துப்புரவு பணியாளர் நலச் சங்கத்தால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளதும் உறுதி செய்யப்படுகிறது.

❖ 11/2020க்கான ஒப்பந்த கூலித்தொகை ரூ.9,04,344/–ஐ (ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) ஒப்பளிக்க மேலொப்பம் வேண்டி ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது கடிதம் ந.க.எண்.1051/2020 நாள் 07.12.2020 மூலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கான ஆதாரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ வங்கிக் கணக்கு அல்லாதோருக்கு வழங்கப்பட்ட ஊதியத்திற்கான இரசீதுகள், பதிலியாட்களுக்கு ரொக்கமாக வழங்கப்பட்ட கூலிக்கான ஒப்புகை இரசீதுகளின் நகல்கள் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம், ஆண்டிபட்டி, பாரத ஸ்டேட் வங்கி, தேனி கிளையில் வைத்துள்ள சேமிப்புக் கணக்கு எண்.31878108552ன் (Savings Bank account) விவரப்பட்டியல் (statement of account) 1.4.2019 முதல் 20.10.2021 வரையிலான காலத்திற்கு ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற

நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் 11/2020 மாதத்தில் ரூ.8,86,258/– (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்தாராயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) வரவாக்கப்பட்டுள்ளது. இதில் பாரத ஸ்டேட் வங்கி மூலம் கொடுக்கப்பட்ட கூலித்தொகை ரூ.6,25,724/– (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து எழுநூற்று இருபத்தினான்கு மட்டும்) செலவினத்தில் (debit) இடம்பெற்றுள்ளது. இந்தியன் வங்கி மூலம் கொடுக்கப்பட்ட கூலித் தொகை ரூ.68,520/– (ரூபாய் அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) cheque No.148237 மூலமும், வங்கிக் கணக்கு அல்லாதவர்கள், பதிலியாட்களுக்கு வழங்கப்பட்ட கூலி, சங்கப் பிடித்தம் ஆகியவற்றுக்கான தொகை ரூ.1,92,000/– (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூற்றிரெண்டாயிரம் மட்டும்) 15.12.2020ல் காசோலை (Cheque) எண்.148239 மூலமாக எடுக்கப்பட்டுள்ளதற்கும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ஆண்டிபட்டி பேரூராட்சி மன்ற 10.01.2020 நாளிட்ட சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.4–ன்படி 1.10.2019 முதல் 30.09.2020 வரை ஓராண்டிற்குத் தேவைவான 65 பணியாளர்களை துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கம், ஆண்டிபட்டி மூலமாக ரூ.7,25,400/– (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து நானூறு மட்டும்) ஒப்பந்தப் புள்ளித் தொகையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தனிஅலுவலரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதே எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டு 1.10.2020 முதல் 30.09.2021 வரை ஒப்பந்த அடிப்படையில் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிகளை மேற்கொள்ள தீர்மானம் எண்.03, 10.01.2020ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது கடிதம் ந.க.எண்.105/2016 நாள் 28.9.2017–ன்படி துப்புரவு பணியாளர் நலச் சங்கம், ஆண்டிபட்டி, 11/2020க்கான ஒப்பந்த தொகையை 78 பணியாளர்களுக்கு ஊதியமாக ரூ.9,04,344/–(ரூபாய் ஒன்பது லட்சத்து நான்காயிரத்து முன்னூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) கோரியுள்ளது. இதில், பேரூராட்சி மன்றத் தீர்மானத்தைவிட கூடுதலாக 13 நபர்களுக்கு எவ்வாறு ஊதியம் கோரப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் எதனையும் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்த திரு. ஆ. முருகானந்தம் சுய உதவிக்குழு நலச் சங்கம் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கான மாத ஊதியம் வழங்கியதில், இரண்டு தினசரி வருகைப் பதிவேட்டினை வைத்துக்கொண்டு பண கையாடல் செய்துள்ளதை விசாரித்து அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு. P. ராஜா நல்லதம்பிஜான்சன் என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்தினால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. இந்நேர்வில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள புகார் குறித்து, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, உதவி இயக்குநர், தேனி அவர்களால் ஆண்டிபட்டி பேரூராட்சியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்வறிக்கை பேரூராட்சி நிர்வாகம், உள்ளாட்சி நிதித்தணிக்கை தலைமை அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித்தணிக்கை தடையறிக்கையில் ரூ.57,81,506/– (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்று ஆறு மட்டும்) ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு மொத்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இவ்விழப்புக்கு ஆண்டிபட்டி பேரூராட்சியில் 1.4.2019 முதல் 31.7.2021 வரை பணியாற்றிய திரு. ஆ. முருகானந்தம், துப்புரவு ஆய்வாளர் (தற்போது சோழவந்தான்

பேரூராட்சி, மதுரை மாவட்டம்), 1.4.2019 முதல் 6.7.2020 வரை செயல் அலுவலராக பணியாற்றிவந்த திரு. கா. பாலசுப்பிரமணியன் (தற்போது அய்யம்பாளையம் பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்), 7.7.2020 முதல் 7.2.2021 வரை செயல் அலுவலராக பணியாற்றிவந்த திரு. கோ. சுப்பிரமணியன் (தற்போது க.புதுப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்) மற்றும் 8.2.2021 முதல் 18.8.2021 வரை செயல் அலுவலராக பணியாற்றிய திரு. இளவரசன் (தற்போது விடுப்பில் உள்ளவர்) ஆகியோர், இதற்கு பொறுப்பான பேரூராட்சி அலுவலர்கள் என்றும், மேற்குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து இழப்புத் தொகையை மீளப்பெற்று பேரூராட்சி நிதியில் வரவாக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், இம்முறைகேடுகள் கடந்த ஆண்டுகளிலும் ஆண்டிபட்டி பேரூராட்சியில் நடைபெற்றுள்ளதா என்பதை நிர்வாக ரீதியில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தணிக்கைத் தடைக்கான பதில் ஆண்டிபட்டி பேரூராட்சியின் மூலம் அனுப்பி வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். மேலும், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனுதாரர் திரு. பி. ராஜாநல்லதம்பி ஜான்சன் என்பவரது புகார் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு பேரூராட்சிகளின் ஆணையரக இணை இயக்குநரது 8.11.2021 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளதற்கிணங்க, திரு. ஆ. முருகானந்தம் என்பவர் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கான சுய உதவிக்குழு நலச் சங்க பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்ட விவரங்களை, தொடர்புடைய ஆவணங்களுடன் விரிவான அறிக்கையுடன் மூன்று நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு, 18.11.2021 கடிதத்தில் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்த அறிக்கை எதனையும், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை. எனவே, இப்புகார் குறித்த மேல் நடவடிக்கைகள் பேரூராட்சிகளின் ஆணையாளர், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது தெளிவாகிறது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தடை அறிக்கையின்படி ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்புத் தொகை ரூ.57,81,506/– (ரூபாய் ஐம்பத்தேழு லட்சத்து எண்பத்தோறாயிரத்து ஐநூற்று ஆறு மட்டும்) என்றும், இவ்விழப்பிற்கு பொறுப்பானவர்களாக கண்டறியப்பட்டுள்ள நால்வரிடமிருந்தும் மேற்படி இழப்புத் தொகையை மீளப்பெற்று பேரூராட்சி நிதியில் வரவாக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme) பணியாற்றும் பணியாளர்களுக்கு வங்கிக் கணக்கு மூலமாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. பாரதப் பிரதமர் முன்னெடுப்பில் அனைவருக்கும் வங்கிக் கணக்கு தொடங்க நாடுதழுவிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில், வங்கிக் கணக்கு இல்லாத நபர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதாகக் கூறுவது ஏற்க இயலாது. அவர்களுக்குப் பதிலாக வங்கிக் கணக்கு உள்ளவர்களை பணியில் அமர்த்தியிருக்க வேண்டும். இது மிக்க தவறான முன்னுதாரணமாகும். எனவே, இதில் பெருமளவில் முறைகேடும், பண கையாடலும் நடந்திருக்கவேண்டும் என்பதில் எந்த அய்யப்பாடும் இல்லை. மேலும், இம்முறைகேடுகளின்மூலம் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பு மிகப்பெரும் தொகையாக உள்ளதால், இம்முறைகேடு குறித்து ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு இயக்கத்தின் மூலம் விரிவான விசாரணை மேற்கொள்ளவும், தவறிழைத்தவர்கள் மீது குற்றவியல் வழக்கு (Criminal Prosecution) தொடரப்பட்டு, மிகக் கடும் தண்டனை (Severe Punishment) வழங்கினால் மட்டுமே பிற்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நிகழ்வதைத் தடுக்கலாம் என்பதால், மேற்படி விசாரணைக்கு உத்தரவிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. P. ராஜாநல்லதம்பிஜான்சன்,
நிரேஷ் மோட்டார்ஸ், பெருமாள் காம்ப்ளக்ஸ்,
தேனி மெனின் ரோடு, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–625 512

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், தேனி–625 512

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்–625 512
நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக
29.12.21